பக்கங்கள் 22+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 13 சனிக்கிழமை 26.04.2025 | அதிர்வு 266

## துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் படுகாயம்



(எஸ்.ஜினோதன்)

கட்டுநாயக்காவில் இன்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச்

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

CLICK HERE VIDEO




# சிங்களவருக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு சத்தியலிங்கம் என்று பெயரை வையுங்கள்!

## உப்பில் சுவையை மட்டும் பார்க்கச் சொன்ன அமைச்சர் பிமலுக்குச் சத்தியலிங்கம் பதிலடி

(கி.வசந்தன்)

சிங்களவர்களுக்குப் பிறக்கின்ற பிள்ளைகளுக்குச் சத்தியலிங்கம்எனப் பெயரைவையுங்கள் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில்இன்றுஊடகவியலாளர் ஒருவர், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ‘ஆனையிறவு உப்பு விடயத்தில் பெயரைப் பார்க்க வேண்டாம். சுவையைப் பாருங்கள்’ என்று கூறியுள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே சத்தியலிங்கம் எம்.பி. மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

03

# மாற்றுக் கட்சிக்கு வாக்களிக்காமல் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்குக!

## தமிழ் மக்களிடம் முன்னாள் எம்.பி. சார்ள்ஸ் வேண்டுகோள்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

“தமிழர்களாகிய நாங்கள் எங்களுடைய அடையாளங்களுடன் இருக்க வேண்டும் என்பதற்காக எமது வரலாற்றை நாங்கள் கொண்டு செல்ல வேண்டும் என்பது எமக்குக் காலம் தந்த கடமையாக உள்ளது. எனவே, தமிழ் மக்கள் மாற்றுக் கட்சிக்கு வாக்களிக்காது வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாட்டான்

03


















# யாழில் தந்தை செல்வாவின் நினைவேந்தல்!

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுனர் தந்தை சா.ஜே.வே.செல்வ நாயகத்தின் 48 ஆவது நினைவு நாளும் நினைவுப் பேருரை நிகழ்வும் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வ நாயகம் நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இன்று காலை நடைபெற்றது.

தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து சமாதியில் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன்போது தந்தை செல்வாவின் நினைவுப் பேருரையைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை முதன்மை பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லா ஆற்றினார்.














# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மாற்றுக்கட்சிக்கு...



பிரதேச வேட்பாளர்களை ஆதரித்து நேற்று வெள்ளிக்கிழமை மாலை நானாட்டான் பிரதேசத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டம் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்ட இந்தப் பிரசாரக் கூட்டத்தில் முன்னாள் எம்.பி. சார்ள்ஸ் மேலும் உரையாற்றுகையில்,

“மன்னார் மாவட்டத்தில் உள்ள தமி ழர்கள் தமிழரசுக் கட்சியில் இருக்கின் றார்கள். அவர்களுடைய எண்ணம் எல்லாம் நாங்கள் தமிழர்களாக வாழ வேண்டும் என்பதே.

மன்னார் நகர சபை, மன்னார் பிர தேச சபை, நானாட்டான் பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை உள்ளிட்ட நான்கு சபைகளையும் நாங் கள் கைப்பற்றுவதற்கு உழைத்துக் கொண்டு இருக்கின்றோம்.

எனவே, தமிழ் மக்கள் மாற்றுக் கட் சிக்கு வாக்களிக்காது வீட்டுச் சின்னத் துக்கு வாக்களித்து தமிழர்களாக நாங்கள் தொடர்ந்து இந்தப் பிரதேசத்தில் எமது அடையாளங்களுடன் வாழ வேண்டும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ன செய்தது என்று பலருக்குக் கேள்வி உள்ளது. இலங்கைத் தமிழரசுக் கட்சி தமி ழர்களுடைய கட்சி என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்த லுடன் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒப்பிட முடியாது. நாட்டின் ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க இருக்கட்டும். அது வேறு. இது எங்களுடைய உள்ளூர் அரசு. இது தமிழரசு. இது எமது ஆட்சி. எமது ஆட்சியையும், அடையாளத்தையும் நாங்கள் ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது.

நாங்கள் தமிழர்களுடைய அடையா ளத்தை விட்டுக்கொடுக்காது தொடர்ச்சி யாகப் பயணித்துக் கொண்டிருக்கின் றோம். எனவே, நானாட்டான் பிரதேச சபை தமிழரசுக் கட்சியின் தலைமைத் துவத்துடன் செயற்பட வேண்டும். இதற்கு அனைவரும் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்.” – என்றார்.





# மின்னல் தாக்கி வயோதிபர் பலி



பொலனறுவை – அரல கங்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெகுலுவெல பிர தேசத்தில் உள்ள வயல்வெளி ஒன்றில் மின்னல் தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

அரலகங்வில,கெகுலு வெல பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய வயோதி பரே உயிரிழந்துள்ளார் என்று அரலகங்வில பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் மற்றுமொரு நபரு டன் இணைந்து வயலில் வேலை செய்துகொண்டி ருக்கும் போது மின்னல் தாக் கிப் படுகாயமடைந்தார்.

அவர் உடனடியாகச் சிகிச் சைக்காக அரலகங்வில வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்ட பின்னர் உயிரிழந் துள்ளார்.

உயிரிழந்த வயோதிபரின் சடலம் அரலகங்வில வைத் தியசாலையின் பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## துப்பாக்கிச்சூட்டில்...

சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கட்டுநாயக்கா, ஹினடியன பிரதேசத்தில் இன்று காலை 5.35 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீடொன்றில் இருந்த நபர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இதனையடுத்து, துப்பாக்கிச் சூட்டில் படுகாயம டைந்தவர் மினுவாங்கொடை வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கம்பஹா பொது வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

29 வயதுடைய இளைஞரே துப்பாக்கிச் சூட்டில் படு காயமடைந்தார்.

இவர் பணம் வட்டிக்குக் கொடுத்தல் மற்றும் பல வர்த் தக நிலையங்களை நடத்தி வருகின்றார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிதாரிகள் இருவரும் ரி – 56 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## சிங்களவர்களுக்கு...

“உப்பில் ருசியைத்தான் பார்க்க வேண்டும். அதுதான் உண்மை. ஆனால், உங்களுக்குப் பிறக்கின்ற பிள்ளைகளு- க்கும் சத்தியலிங்கம் என்று பெயரை வையுங்கள். ஏன் ரத்நாயக்கா, விமல் வீரவன்ச, அந்த வன்ச, இந்த வன்ச எனப் பெயரை வைக்கின்றீர்கள்.

சத்தியலிங்கம், சுந்தரலிங்கம், பொன்னம்பலம் என உங்களது பிள்ளைகளுக்கும் பெயரை வையுங்கள். ஏன் என்றால் உங்களுக்குப் பிள்ளைதானே வேண்டும். பெயர் முக்கியமில்லைதானே. அதற்குப் பின்னர் நாங்கள் வாயை மூடிக்கொண்டு இருக்கின்றோம்.” – என்றார்.




# உள்ளூராட்சி சபைத் தேர்தல்: ஊழியர்களுக்கான விடுமுறை அறிவிப்பு

**(எஸ்.ஜினோதன்)**

வரும் மே 6 ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் அவர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் விடுமுறை வழங்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் விடுமுறைக் காலம், தற்காலிக ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய சிறப்பு விடுமுறையாகக் கருதப்பட வேண்டும் எனவும், இது ஊழியர்களின் வழக்கமான விடுமுறை உரிமைகளுக்கு வெளியில் இருக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒவ்வொரு தொழிலாளருக்கும் வாக்களிப்பதற்காக வழங்கப்படும் விடுமுறைக் காலம், அவரது பணியிடம் மற்றும் வாக்குச்சாவடிக்கு இடையிலான தூரத்தை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி விடுமுறை அறிக்கையில் வாக்களிப்பதற்காகக் கடமை நிலையத்தில் இருந்து தனது வாக்கெடுப்பு நிலையத்துக்குச் செல்ல வேண்டியுள்ள தூரத்தின் அளவு - வழங்க வேண்டிய ஆகக் குறைந்த விடுமுறைக் காலம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.மீ. 40 அல்லது அதற்குக் குறைவான தூரம் - அரை நாள் (1/2)

கி.மீ. 40 இற்கும் 100 இற்கும் இடைப்பட்ட தூரமெனில் - ஒரு நாள் (1)

கி.மீ. 100 இற்கும் 150 இற்கும் இடைப்பட்ட தூரமெனில் - 1 1/2 நாட்கள்

கி.மீ. 150 இற்கு அதிகமாயின் - 2 நாட்கள்

- இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கையில் விடுமுறைக்காலம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடற்படையினரின் படகில் நெடுந்தீவுக்கு தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்ற டக்ளஸ்



**(ந.லோகதயாளன்)**

யாழ். நெடுந்தீவில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளும் வகையில் ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா நெடுந்தீவுக்குக் கடற்படையினரின் படகில் சென்றுள்ளார்.

இன்று அங்கு சென்ற முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 3 தினங்கள் தங்கி நின்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே கடற்படையினரின் படகில் அவர் நெடுந்தீவுக்குச் சென்றுள்ளார்.

நெடுந்தீவில் இருந்து நாளை மறுதினமே அவர் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.



# வவுனியாவில் தந்தை செல்வாவின் 48ஆவது நினைவேந்தல் அனுஷ்டிப்பு

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் தந்தை செல்வாவின் 48 ஆவது நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா, மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் அமைந்துள்ள அவரது சிலை முன்பாக இன்று காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தந்தை செல்வநாயகத்தின் சிலைக்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், கட்சியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.











# பாப்பரசரை நினைவேந்தி வவுனியாவில் துக்க தினம்



(கி.வசந்தன்)

வவுனியாவில் பாப்பரசர் நினைவாகத் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கத்தோலிக்கத் திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அடிகளாரின் மறைவையடுத்து இன்று நாடு பூராகவும் துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அந்தவகையில், வவுனியா மாவட்ட செயலகத்தில் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திரனால் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டதுடன், பாப்பரசர் நினைவாக மெழுகுவர்த்தி தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் கத்தோலிக்க மதகுருமார், மேலதிக மாவட்ட அரச அதிபர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நாடு தாங்காது!

'தங்கப் பதக்கம்' படத்தில் ஒரு பாடல் 'சோதனை மேல் சோதனை போதுமடா சாமி....' என்றஅடியில் தொடங்குகின்றது. அதில் இடையில் ஒரு வாசகம் வரும். "காய்ஞ்சு போன நதியெல்லாம் வற்றாத ஜீவ நதியை பார்த்து ஆறுதல் அடையும். அந்த நதியே வத்திப் போனால்?" - என்பதுதான் அந்த வாசகம்.

தற்போது பெரும் தாகத்தை ஏற்படுத்தி வரும் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த சுகாதாரத் துறையினர் எடுத்து வரும் தீவிர நடவடிக்கைகளுக்கு மத்தியில் அத்துறையினர் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை நோக்கும் போது இந்த வாசகம்தாம் நினைவுக்கு வருகின்றது.

இரத்தினபுரி போதனா வைத்திய சாலையில் டெங்கு காய்ச்சலால் பாதிக் கப்பட்ட சுகாதார பணியாளர்களின் எண்ணிக்கை 166 ஆக உயர்வடைந்துள் ளதாக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாக வைத்தியசாலை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜனவரி மாதம் முதல், இரத்தினபுரி மாவட்டத்தில் மாத்திரம் 1,465 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் கடந்த ஆண்டில் டெங்கு நோயினால் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். 24 உயிரிழப்புகளும் பதிவான நிலையில் இந்த ஆண்டின் 3 மாத நிறைவில் மட் டும் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

இவ்வாறான சூழலில் டெங்கு நோயி னால் மக்களும் டெங்கு நோயாளர்களி னால் வைத்தியசாலைகளும் திண்டாடி வரும் நிலையில், டெங்குவின் குடும் பத்தை சேர்ந்த சிக்கின்குனியாவும் தற் போது ஜோடி சேர்ந்து மக்களை மிரட்டத் தொடங்கியுள்ளது.

அவை மாத்திரமல்ல, முன்னர் அடி யோடு ஒழிக்கப்பட்டது எனக் கருதப் பட்ட மலேரியா போன்ற மோசமான நோய்களும் நுளம்புப் பெருக்கத்தினால் தீவிரமாகப் பரப்பப்படுகின்றன எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

''யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை நால்வர் சிக்குன்குனியா அறிகுறிகளுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். அந்த நால்வருக்கும் சிக்கின்குனியா உறுதிப்படுத்தப்பட்டுள் ளது. இந்த விடயம் தொடர்பில் கூடு தலான அவதானத்தைச் செலுத்தியுள் ளோம்'' - என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத் துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நுளம்புகளால் பரவும் வைரஸ் நோயான சிக்குன்குனியா வேகமாகப் பரவி வருவதுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். எனவே இலங்கை முழுவதும் சிக்குன்குனியா பாதிப்பு அதிகரித்து வருகின்றது. அதன் அறிகு றிகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என மருத்துவ ஆலோசகர் டொக்டர் அச்சலா பாலசூரிய எச்சரித்துள்ளார்.

நுளம்பு பெருக்கம் காணப்படும் இடங்களை அகற்றுவதன் மூலம் மட்டுமே, சிக்குன்குனியா பரவலைக் கட்டுப்படுத்த முடியும். நுளம்புகள் கடிப்பதன் மூலம் மனிதர்களுக்கு இது பரவுகிறது. எனவே சிக்குன்குனியா நோய் ஏற்படுவதற்கு ஏதுவான காரணி களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளுமாறும் சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்துகின்றனர்.

ஏற்கனவே கொரோனாவின் பிடியில் சிக்கி இதுவரையில் அதன் பாதிப்புக ளிலிருந்து மீண்டெழ முடியாத நிலை யில் தவித்துவரும் மக்களை டெங்கு, சிக்குன்குனியா போன்றவை போட்டுப் புரட்டி எடுத்துவருகின்றன. இப்போது டெங்குவுடன் சிக்குன்குனியா வும் கை கோர்த்துள்ளதால் வைத்தியசாலைகள் டெங்கு, சிக்குன் குனியா நோயாளர்களி னால் நிரம்பி வருகின்றன. மலேரியாவும் இதனுடன் சேர்ந்து கொண்டால் நாடு தாங்காது என்பது நிச்சயம்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## மலையக மக்கள் ஒன்றிணைந்து சரியான திசையில் பயணியுங்கள்!

### சமூக செயற்பாட்டாளர் சிவனு சத்தியமூர்த்தி தெரிவிப்பு

(மஸ்கெலியா)

அன்று மக்கள் சேவைக்கு ஒதுக்கிய பணத்தில் மந்திரிக்கு மாளிகை கட்டியதால் இன்று நாடாளுமன்றத்துக்கு செல்ல பணம் இல்லாமல் பஸ்ஸிலும் ஆட்டோவிலும் பயணிக்க வேண்டியுள்ளது. மலையக மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மாற்றத்தைப் புரிந்து கொண்டு சரியான திசையில் ஒன்றாய் பயணிக்க வேண்டும்.

இவ்வாறு பெருந்தோட்ட நிறுவன நிர்வாகியும்சமூகசெயற்பாட்டாளருமான சிவனு சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அண்மையில் தலவாக்கலை பொது மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜனாதிபதியின் கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் பேசுகையில்,

கடந்து 76 வருடங்களாக மலையகத்தின் பிரதான இரண்டு கட்சிகளுக்கும் அவ்வப்போது அவர்கள் விரும்பிக் கைக்காட்டும் வெவ்வேறு சின்னங்களுக்கு அவர்களை நம்பி மாறி மாறி மாற்றத்தை எதிர்பார்த்து வாக்களித்துள்ளோம். அனால் மலையகத்தில் மாற்றம் ஏற்பட வில்லை.



ஒரே மாதிரியான பொய் வாக்குறுதிகளைச் சொல்லி எமது பரம்பரையை ஏமாற்றியது மட்டும் அல்லாமல் எங்கள் காலத்திலும் அதே பொய் வாக்குறுதியை வழங்குகின்றனர்.

நடை பாதையை சீரமைத்து தருவதாககூறி வாக்குகளை பெற்றுகொண்டார்கள். இறுதியில் நடந்தது என்னவென்றால், தாத்தா காலத்தில் அந்த வேட்பாளர் அவருக்கென்று ஒரு வீட்டைக் கட்டி என்னுடைய அப்பா காலத்தில் அந்த வீட்டை பங்களாவாக மாற்றி என்னுடைய காலத்தில் அதை மாளிகையாக மாற்றிக் கொண்டுள்ளார். இதுதான் அவர்களின் மலையக மாற்றம்.

அனால் தற்போதைய அரசில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்களது வரிப்பணத்தை வீண் விரயம் செய்யாமல் அவர்கள் எந்த ஒரு வாகனமும் இல்லாமல் இன்று நாடாளுமன்றத்துக்கு செல்ல பணம் கூட இல்லாமல் பஸ்ஸிலும் ஓட்டோவிலும் பயணித்து அந்த வீண் செலவாகும் பணத்தை எங்களது சேவைகளுக்காக சேமிப்புச் செய்கிறார்கள். இதுவே மலையகத்தின் உண்மையான மாற்றம்.

இவர்கள் சேமிக்கும் இந்தப் பணம் எமக்கு வந்தடையும் ஒரு இடம் தான் பிரதேச சபை. ஆகவே இந்தப் பணம் மூலமாக எமக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைச் சரியான முறையில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் முன்பை போல் இல்லாமல் ஊழலற்ற பிரதேச சபை உறுப்பினர்கள் தேவை.

எனவே எதிர்வரும் பிரதேச சபை தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சியில் திசைகாட்டி சின்னத்தில் போட்டியிடும் எமது ஊழலற்ற வேட்பாளர்களை ஆதரித்து, அவர்களை அமோக வெற்றி பெற செய்வதன் மூலம் எமது பரம்பரை செய்த தவறுகளில் இருந்து மீண்டெ முந்து எமது எதிர்கால சந்ததியினரின் சுபீட்சமான வாழ்க்கைக்கு வழி அமைக்க முடியும்.– என்றார்.

## தவிசாளர் தெரிவு கட்சியை பொறுத்தது முதன்மை வேட்பாளர் இங்கு இல்லை!

### தமிழரசு வாலிப முன்னணி செயலாளர் நிதான்சன் தெரிவிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

இலங்கை தமிழரசு கட்சி அம்பாறை மாவட்டத்தில் ஆறு சபைகளிலே போட்டியிடுகின்றது. இதில் தவிசாளர் தெரிவு என்பது முற்று முழுதாகக் கட்சியைப் பொறுத்தது.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் செயலாளரும் கல்முனை தொகுதி இணைப்பாளருமான அருள் நிதான்சன் தெரிவித்தார்.

சமகாலத்தில் முதன்மை வேட்பாளர் மற்றும் தவிசாளர் தெரிவு தொடர்பாகப் பல்வேறுபட்ட கருத்துகள் தெரிவிக்கப் பட்டு வருகின்றன.

இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவித்த போது மேற்கண்டவாறு



கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

உள்ளூராட்சித் தேர்தலைப் பொறுத்தவரையில் முதன்மை வேட்பாளர் என்று ஒன்று இல்லை.

வட்டாரத்தின் பிரதான வேட்பாளர்கள் மற்றும் மேலதிக வேட்பாளர்கள் என்று இரு அணியினர் இருக்கின்றார்கள் . அது தவிர முதன்மை வேட்பாளர் என்ற பதம் இங்கு பயன்படுத்தப்படுவதில்லை .

அடுத்தது, தவிசாளர் தெரிவைப் பொறுத்தவரையிலே அது முழுக்க முழுக்க கட்சியைச் சார்ந்தது.

ஒரு வேட்பாளர் முன்னாள் தவிசாளராக இருக்கலாம். முன்னாள் உறுப்பினராக இருக்கலாம். ஏன் புதியவர்களாக கூட இருக்கலாம்.

யார் எப்படி இருந்தாலும் அது கட்சியினுடைய தீர்மானத்தை பொறுத்தே அமையும்.

இதனை தெளிவாகத் தெரியப் படுத்திக் கொள்கின்றேன்.– என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்






## மாந்தை கிழக்கில் தமிழரசு தேர்தல் பரப்புரை!

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு உள்ளூர் அதிகார சபைப் பகுதிகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் நேற்று (25) இடம்பெற்றன.

இந்தத் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

அந்தவகையில் மாந்தை கிழக்கு உள்ளூர் அதிகார சபையின் கீழ் காணப்படும் மாந்தை கிழக்கு பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், பனங்காமம் ஆகிய வட்டாரங்களில் இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் இடம்பெற்றன.

இந்தத் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் வன்னி மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, தமிழரசுக் கட்சியின் மாந்தை கிழக்கு உள்ளூர் அதிகாரசபை வேட்பாளர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வவுனியாவில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உப அலுவலகம்!

### எமது ஆட்சியில் நடவடிக்கை என்கிறார் சுயேச்சை வேட்பாளர் கிரிதரன்

**(கி.வசந்தன்)**

மாநகரசபையின் ஆட்சி அதிகாரம் எங்களுக்கு வழங்கப்பட்டால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உப அலுவலகம் ஒன்றை வவுனியாவில் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுயேச்சை குழு ஒன்றில் கோடாலிச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளரான சி.கிரிதரன் தெரிவித்தார்.




வவுனியாவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இதுவரை காலமும் நகர சபையைப் பல்வேறு கட்சிகள் ஆட்சி செய்திருந்தன. அவர்கள் செய்யத் தவறிய பல விடயங்கள் உண்டு. நான் நகர சபையில் சுகாதார பரிசோதகராக பணியாற்றிய போது பல்வேறு பிரச்சினைகள் இருந்தன. அவற்றை நேரடியாகவே நாங்கள் அவதானித்திருந்தோம்.

அந்தவகையில் கழிவகற்றல் செயற்பாடுகளில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. குறிப்பாக கணவன், மனைவி ஆகிய இருவரும் அரச ஊழியர்களாக இருந்தால் அவர்கள் பணிக்கு சென்று விடுவார்கள். அதன் பின்னர் கழிவகற்றும் வாகனங்கள் செல்வதால் வீட்டில் யாருமில்லாத நிலையில் கழிவுகளை அகற்ற முடியாத நிலைமை இருந்தது.

இருப்பினும் எம்மால் முடிந்தவரை அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தேன். எனவே தற்போது சபையின் ஆட்சி எமக்கு கிடைத்தால் அதற்கான நிரந்தரமான ஒரு தீர்வை எடுப்போம்.

அத்துடன் மாநகரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டட அனுமதிகளை பெறுவதில் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர். நகர அபிவிருத்தி அதிகார சபையே அந்த அனுமதியை வழங்குகின்றது. அந்த அலுவலகம் தற்போது யாழ்ப்பாணத்திலேயே அமைந்துள்ளது.

மாதத்தில் சிலதடவைகள் மாத்திரே அவர்கள் இங்கு வருவார்கள். இதனால் பொது மக்கள் தமது சேவைகளை பெற்றுக் கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. எனவே இந்தத் தேர்தலில் மக்கள் எமக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கினால் நகர அபிவிருத்தி அதிகார சபையின் உப அலுவலகம் ஒன்றை வவுனியாவில் திறப்பதற்கான கவனத்தை எடுப்போம்.- என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் காரைதீவு வேட்பாளர்கள் அறிமுகம்



(வி.ரி. சகாதேவராஜா)

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பில் காரைதீவு பிரதேச சபையில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வும் ஊடக சந்திப்பும் காரைதீவு பொது நூலகக் கேட்போர் மண்டபத்தில் நடைபெற்றன.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஹென்றி மகேந்திரன் தலைமையில் இந்த அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. ஜனநாயக தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் செயலாளர் நாகலிங்கம் குருபரன் பிரதான பேச்சாளராக கலந்து கொண்டார். கூட்டமைப்பின் முக்கியஸ்தர் சி.புண்ணியநாதனும் கலந்து கொண்டார்.

காரைதீவு பிரதேச சபையில் போட்டியிடும் பிரதான வேட்பாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட வேட்பாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

## மலையக மக்களுடைய வாக்குகளை பணத்துக்கு விற்பனை செய்யக்கூடாது

### ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் கலைச்செல்வன் தெரிவிப்பு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மலையக மக்களலாள் அளிக்கப்படும் பெருமதியான ஒவ்வொரு வாக்குகளும் அற்பசெற்ப சாலுகைகளுக்கும் பணத்துக்கும் பறிபோகக் கூடாது.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் கீழ் வட்டார வேட்பாளர் தியாகராஜா கலைச்செல்வன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் கீழ் வட்டாரத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் மக்களிடம் இருந்து பெறப்பட்ட வாக்குகள் பணத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. தேர்தல் காலப் பகுதியில் மாத்திரம் பல்வேறு சுயேச்சை குழுவில் போட்டியிடும் வேட்பாளர் மத்தியில் வந்து வாக்கு சேகரிப்பதை வழமை போல மேற் கொண்டு வருகிறார்கள். மக்களுக்கு கடந்த நல்லாட்சி அரசில் வீடமைப்பு முதல் வீதி அபிவிருத்தி, காணி உறுதிப் பத்திரம் வழங்கல், மலையகத்துக்கான அதிகார சபைகள் போன்ற பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதை மக்கள் இன்னும் மறக்கவில்லை.



இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது எமக்கு ஒரு முக்கியமான தேர்தலாகும். உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கடந்த காலங்கள் போல் இல்லாமல் மக்களுக்கான சிறந்த சேவையை முன்னெடுக்க வேண்டும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் பழி வாங்களுக்கு மத்தியில் உடைத்தெறியப்பட்ட பொகவந்தலாவ டியன்சின் நகரத்தை எமது ஆட்சியின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டுமானால் நாம் அனைவரும் ஒருமித்த குரலாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.– என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




## இ.தொ.காவின் அலுவலகம் திறப்பு!

(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொகவந்தலாவ கெர்க் கஸ்வோல்ட் மேல் வட்டாரத்தில் போட்டியிடும் கணேசன் இளையராஜா தலைமையில் பொகவந்தலாவ டியன்சின் நகரில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

டியன்சின் நகரில் உள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜைகளின் பின்னர் அமரர் ஆறுமுகன் தொண்டமானுடைய உருவப்படத்துக்கு மலர்களும் தூவப்பட்டன. இந்த நிகழ்வில் வேட்பாளர் கணே சன் இளைய ராஜா, அலுவக ஊழியர், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



## கற்பிட்டி கண்டக்குழி வட்டாரத்தின் முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகம்

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கற்பிட்டி பிரதேச சபையின் கண்டக்குழி வட்டாரத்துக்கான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரசாரஅலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசல் துறையில் வேட்பாளர் முயிஸ்தீன் தலைமையில் இது இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினருமான எஸ்.எச்.எம்.நியாஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங் கிரஸ் உயர்பீட உறுப்பினர் ஏ.எச்.எம்.பைரூஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கற்பிட்டி அமைப்பாளரும் உயர் பீட உறுப்பினருமான எம். எச். எம். ஹில்மி மற்றும் கற்பிட்டி பிரதேச சபைக்கு போட் டியிடும் வேட்பாளர்களான மௌலவி நிப்கான், முயீஸ்தீன் ஆகியோருடன் நூற்றுக் கணக்கான கட்சி உறுப்பி னர்களும் கலந்து கொண்டனர்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டு. தேர்தல் அலுவலகம் திறப்பு!

(பழுவூரான்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் மட்டக்களப்பு மாநகரசபை புளியந்தீவு தெற்கு 18 ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளரான பேராசிரியர் வைத்திய கலாநிதி கே.ஈ.கருணாகரனின் தேர்தல் பணிமனை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் மாநகரசபை உறுப்பினர் அ.கிருரஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சிறிநாத், முன்னாள் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் உள்ளிட்ட கட்சி பிரமுகர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வேட்பாளர், அதிதிகள் வரவேற்கப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினரால் தேர்தல் பணிமனை திறந்து வைக்கப்பட்டது.

## யாழ். முஸ்லிம் மக்கள் ஈ.பி.டி.பிக்கு நன்றியுடையவராக இருக்க வேண்டும்

### யாழ். மாநகர் முஸ்லிம் வேட்பாளர் சரபுல் அனாம்

(எஸ். நிதர்ஷன்)

ஈ.பி.டி.பிக்கு யாழ். முஸ்லிம் மக்கள் என்றும் நன்றிக்கடன் பட்டவர்களாகவே இருக்கின்றனர் எனத் தெரிவித்த ஈ.பி.டி.பியின் யாழ். மாநகர வேட்பாளர் பி.எஸ்.எம். சரபுல் அனாம், அந்த நன்றிக் கடனின் பிரதியீடாக நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றிபெறச் செய்து வலுப்படுத்துவது அவசியம். அதற்காக யாழ். முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.




யாழ். ஊடக அமையத்தில் இன்று (26) ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்டு இவ்வாறு அழைப்பு விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

யாழ். மாவட்டத்தில் முஸ்லிம் மக்களின் விகிதாசாரம் என்பது மிகச் சொற்பமானது.

இவ்வாறான சூழலில் அரசியலானாலும் சரி வேறு எந்த விடயமானாலும் சரி நாம் தமிழ் மக்களுடன் இணைந்து பயணிக்க வேண்டியது எமது சூழலின் தேவையாக இருக்கின்றது.

எமது முஸ்லிம் சமூகத்தில் சிலர் ஊடகங்களில் தமது வாய்க்கு வந்தபடி வரலாற்றை சொல்ல முயற்சிக்கின்றனர்.

குறிப்பாக யாரென்றே தெரியாத சில கட்சிகள் 30 ஆண்டுகளாக எம்முடன் இருந்ததாக பொய் கூறுகின்றனர்.

1990 களில் நாம் இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட சூழலில் டக்ளஸ் தேவானந்தாவை தவிர வேறு எந்தவொரு தமிழ் அரசிதல் தரப்பினரும் எமக்கு உதவிக்கரம் நீட்டவில்லை.

குறிப்பாக அன்றைய சூழல் அவர்களை அதற்கான சூழ்நிலையையும் கொடுக்கவில்லை.

அனால் இருப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டு புத்தளத்தில் தஞ்சம் புகுந்தபோது ஈ.பி.டி.பியே எனக்கு ஆதரவு கொடுத்தது.

புத்தளத்தில் காணி தந்து வீடு அமைத்து தந்து எம்மை வாழ வைத்தது மடுமல்லாது தொழில் வாய்ப்புக்களும் தந்து எம்மினத்தை வாழவைத்தவர் டக்ளஸ் தேவானந்தா.

எனவே வரவுள்ள தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியை வெற்றிபெறச் செய்ய எமது முஸ்லிம் மக்கள் ஆதரவை வழங்குவது அவசியம்.- என்றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# கால்பந்து சின்னத்தின் அலுவலகம் திறந்து வைப்பு

(எ.எச்.எம்.ஹாரீஸ்,
மத்திய முகாம் )

சுயேட்சை குழு -01 கால்பந்து சின்னத்தின் தலைமை அலுவலகம் சாளம்பைக்கேணி வடக்கு வட்டாரம் ஆலடி சந்தியில் திறந்து வைக்கப்பட்டது.

நாவிதன்வெளி பிரதேச சபை தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டு இரட்டைத் தொகுதிகளை வென்றெடுப்பதற்கு பிரபல சமூக சேவையாளர் எம். ஏ. நளீர் கால்பந்து சின்னத்தில் களமிறங்கியுள்ளார். அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசத்தில் மக்களுக்கு உயரிய சேவைகளை வழங்க வேண்டும் என்ற நோக்கில்தான் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

சாளம்பைக்கேணி வடக்கு வட்டார மக்கள் எனது வெற்றிக்காக வாக்களிக்கத் தீர்மானித்து விட்டார்கள். அவர்கள் என்றும் என்னுடனே இருப்பார்கள். நான் அவர்களுக்கு முடியுமான சேவைகளைப் பெற்றுக் கொடுப்பேன். அவர்களுக்காக எனது வீட்டின் கதவு 24 மணி நேரமும் திறந்திருக்கும். விசேடமாக ஊரின் அபிவிருத்திக்கும், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கும் மக்களின் வாழ்வாதார வசதிகளுக்கும் நான் பெரும் பங்காற்றி இருப்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

இதன் அடிப்படையில் எமது வெற்றிக்காக விளையாட்டு கழக உறுப்பினர்கள், மகளிர் அமைப்புக்களின் உறுப்பினர்கள், கல்விமான்கள், வர்த்தகர்கள், அரச தனியார் துறை ஊழியர்கள் என அனைவரதும் பங்களிப்பின் மூலம் எதிர்வரும் தேர்தலில் வெற்றியீட்டுவதன் ஊடாக வட்டார மக்களுக்கு மாத்திரமன்றி சகல மக்களுக்கும் தமது சேவைகளை திருப்திகரமாக வழங்க முடியும்.

கடந்த காலங்களில் பல அரசியல் கட்சிகள் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றும் கலாசாரத்தில் இருந்து விடுபட்டு உண்மைக்கு உண்மையாக சமூகத்துக்கு சேவையாற்ற கூடிய ஒரு வேட்பாளரை தெரிவு செய்ய வேண்டும்.

இதன் அடிப்படையில் எமது கால்பந்து சின்னத்துக்கு வாக்களித்து இரட்டை தொகுதிகளை வென்றெடுக்க அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்.- என்றார்.

இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் பிரதித் தவிசாளர் ஏ.கே அப்துல் சமத், தேச சபை முன்னாள் உறுப்பினர் சுபைதீன், கால்பந்து சின்னம் சுயேச்சை வேட்பாளர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



### யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்

# பொதுச் சுகாதார சேவைகள், கிளினிக்குகள் திங்கள்கிழமை முடங்கும் அபாயம் நிலை!

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொதுச் சுகாதார சேவைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சிகிச்சை நிலையங்களது சேவைகள் நாளை மறுதினம் திங்கள்கிழமை (28) தொடக்கம் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தெரியவந்துள்ளதாவது,

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான மேலதி நேரக் கொடுப்பனவுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எங்கும் நடைமுறைப்படுத்தப்படாத நடைமுறையை யாழ். மாநகர சபையின் கணக்காளர் பகுதி தன்னிச்சையாகச் செயற்படுத்த முன் வந்துள்ளது.

எந்தவொரு நிதிச் சுற்றறிக்கை மூலமும் பிரசுரிக்கப்படாத நடைமுறையை யாழ். மாநகர சபையின் கணக்காளர் பகுதி மேற்கொள்ள முயன்றுள்ள நிலையில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் பெரும் மன உழைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் நளை மறுதினம் திங்கள்கிழமை முதல் தமது சேவைகளை முடக்குவதற்கு முன்வந்துள்ளனர்.

இதனால் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு முற்று முழுதான பொறுப்பை யாழ். மாநகர சபை ஆணையாளரும், கணக்காளர் பகுதியும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# எல்லா இன, மதத்தவர்களும் நல்லவர்களே என்று திகழ்ந்தவர் திருத்தந்தை பிரான்சிஸ்!

### பேசாலை பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளார் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

யாராவது தீவிரவாதம் கொண்டவர்களாக இருந்தாலும் அவர்கள் சார்ந்த சமூகம் எல்லோரும் அவர்கள் போன்று இருக்க மாட்டார்கள். எல்லா இன, மதம் சார்ந்தவர்களும் நல்லவர்களே என்ற சிந்தனையுடனும் வாழ்விலும் திகழ்ந்தவர்தான் அமரர் திருத்தந்தை பிராக்சிஸ்.

பேசாலை பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ்ஸின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும் தினமாகிய இன்று (26) மன்னார் மறைமாவட்ட சகல ஆலயங்களிலும் இரங்கல் திருப்பலியுடன் அவரின் உருவபடத்துக்கும் மக்கள் அஞ்சலி செலுத்திய போது பேசாலை பங்கில் நடந்த நிகழ்வில் பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பரிசுத்த பாப்பரசரின் ஆன்மா மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகத்துக்கு இறைவனால் எடுத்துக்கொள்ளப் பட்டுவிட்டது.

உரோமாப்புரியில் இன்று சனிக்கிழமை அவரின் பூதவுடல் நல்லடக்கம்



செய்யப்படுகின்றது.

நாம் எல்லோரும் அவரின் பூதவுடலைத் தரிசித்து அஞ்சலி செலுத்த அவா கொண்டாலும் எம்மால் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

இருந்தும் மன்னார் மறைமாவட்ட இறைமக்களாகிய நாம் இன்றையத் தினம் ஆலயங்களின் அவரின் ஆன்மாவுக்காக இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுத்து அவரின் உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்துகின்றோம்.

இவர் மறை மாவட்ட குருவாக உருவாக்கப்பட்டபோதும் பின் இயேசு சபையில் இணைந்து குருவாக திரு நிலைப்படுத்தப்பட்டவர்.

பின் 2013 ஆம் ஆண்டு திரு அவைக்கு திருத்தந்தையாக திரு நிலைப்படுத்தப்பட்டார்.

திருத்தந்தை பிரான்சீஸ் திருத் தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டபோது கர்தினால்மார் அவருக்கு ஆசீர் வாழ்த்துக்கள் தெரிவித்தபோது இதில் ஒருவர் திருத்தந்தைக்கு தெரிவித்தது, உங்கள் பணிவாழ்வில் ஏழைகளை மறந்து விடாதீர்கள் என்று.

வழமையாக புதிய பாப்பரசர் தெரிவானதும் மக்கள் முன் தோன்றி முதல் ஆசீர் வழங்குவர். ஆனால் இவரோ திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்டதும் மக்கள் முன் தோன்றி, தான் மக்களுக்கு ஆசீர் வழங்குவதற்கு முன் இவர் மக்களுக்கு முன் மண்டியிட்டு மக்களை நோக்கி முதலில் நீங்கள் என்னை ஆசீர்வதியுங்கள் என வேண்டியவர்.

இவர் திருந்தையாக தெரிவு செய்யப்பட்டபின் விரும்பிய பெயர் ஒன்றை இவர் வெளிப்படுத்த வேண்டும். அப்பொழுது பிரான்சிஸ் என தனது பெய

தொடர்ச்சி▼



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998

# எல்லா இன,...

**தொடர்ச்சி▲**

ரைத் தேர்ந்தெடுத்தார்.

இதற்கு இவர் கொடுத்த விளக்கம் பிரான்சிஸ், அசீசீஸ் என்ற புனிதர் ஏழைகளின் மத்தியிலும் சுற்று சூழல் மத்தியிலும் மிகவும் அக்கறை கொண்டமையால்தான் நான் இந்த நாமத்தை தேர்ந்தெடுத்து ஏழ்மையை விரும்புகின்றேன் என தெரிவித்தாராம்.

அவரின் இந்த எண்ண வாழ்விலேயே அவர் தனது இறுதி மூச்சு வரைக்கும் வாழ்ந்தது மட்டுமல்ல அவரின் இறுதிச் சடங்கையும் ஏழ்மையிலேயே தேர்ந்தெடுத்தார்.

ஒருசில மதத் தீவிரவாதிகளைப் பற்றி பிரான்சிஸிடம் கூறும்போது, இவரின் பதில் எந்த மதத்திலும் ஒரு சில தீவிரவாதிகள் இருக்கத்தான் செய்வார்கள். அதனால் அந்த மதத்தைச் சார்ந்தவர்கள் துரோகிகள் அல்ல. நாம் எல்லோரையும் அன்பு செய்ய வேண்டும் என வலியுறுத்தியவர் பிரான்சிஸ்.– என்றார்.






# திருத்தந்தையின் நல்லடக்கத் தினத்தில் மன்னார் மறைமாவட்டத்தில் திருப்பலிகள்

(வாஸ் கூஞ்ஞ)

திருத்தந்தை பிரான்சீஸ்ஸி பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும் தினமாகிய இன்று (26) மன்னார் மறைமாவட்ட சகல ஆலயங்களிலும் இரங்கல் திருப் பலியுடன் அவரின் உருவபடத்துக்கும் மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

12 வருடங்களாக உலக திருஅவை இறை மக்களை வழிநடத்த இறைவன் இறைமக்களுக்காக அனுப்பிவைத்த திருத்தந்தை பிரான்சிஸ் ஆண்டகையின் ஆன்மா மண்ணுலகை விட்டு விண்ணு லகம் சென்றிருந்தது.

இவரின் உடலின் நல்லடக்கம் இன்று சனிக்கிழமை (26) உரோமாபுரியில் நல்லடக்கம் செய்யப்படுவதை முன் னிட்டு மன்னார் மறை மாவட்டத்தில் அனைத்து தேவாலயங்கலிலும் இரங் கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அமரத்துவம் அடைந்த பரிசுத்த பாப்பரசரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக வேண்டுதல்கள் செய்யப்பட்டன.



# உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர் தெரிவாவது எப்படி?

சமகால உள்ளூராட்சி தேர்தல் எதிர்வரும் மே மாதம் ஆறாம் தேதி நடைபெறவுள்ளது.

தேர்தலின் பின்னர் யார் மேயர்? யார் தவிசாளர் ? என்ற கேள்வி இயல்பாகவே எழுவது வழமை.

இது தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தப் பதிவு இடப்படுகிறது

தற்போதுள்ள தேர்தல் முறையானது கலப்பு தேர்தல் முறையாக உள்ளதால் பல உள்ளூராட்சி மன்றங்களில் தவிசாளர்களை தனியொரு கட்சியால் நியமிப்பது பெரும் சவாலாகவே உள்ளது.

இதனால் உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிந்த கையுடன் தவிசாளர் தெரிவு பெரும் சூடு பிடிக்கும் அம்சமாகவே காணப்படும்.

இங்கு ஓர் உள்ளூராட்சி மன்றத்தின் தவிசாளர் எவ்வாறு தெரிவு செய்யப்படுவார் என்பதனை பார்ப்போம்.

### தெரிவத்தாட்சி அலுவலரின் பங்கு

1. உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிந்தவுடன் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட (வட்டார, பட்டியல்) உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் தெரிவத்தாட்சி அலுவலரால் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும்.

2. தெரிவத்தாட்சி அலுவலரால் வர்த்தமானியில் வெளியிட்ட ஓர் உள்ளூராட்சி மன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை ஒரு கட்சி அல்லது சுயேட்சைக் குழு பெற்றுக் கொள்ளுமாயின் தவிசாளரை பெயர் குறித்து தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பும் அதிகாரம், குறித்த கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேட்சைக் குழுவின் தலைவருக்கு உண்டு.

3. எந்தக் கட்சியும் அல்லது சுயேட்சைக் குழுவும் 50 வீதத்துக்கும் மேற்பட்ட ஆசனங்களைப் பெறவில்லையாயின் குறித்த உள்ளூராட்சி மன்றத்தின் தவிசாளரை தெரிவு செய்யும் அதிகாரம் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு கிடைக்கும்.

### தவிசாளர் தெரிவில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் வகிபாகம்

1. தெரிவு செய்யப்பட்ட குறித்த உள்ளூராட்சி மன்றத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்ட அழைப்பிதழ் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் அனுப்பி வைக்கப்படுவதுடன் அந்தக் கடிதத்தில் காலம், நேரம், இடம் என்பன குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

2. கூட்ட அழைப்பிதழ் கிடைக்கப் பெற்ற அனைத்து உறுப்பினர்களும் உரிய நேரத்திற்கு குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்பதுடன் மொத்த உறுப்பினர்களில் அரைவாசிக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டால் மாத்திரமே தவிசாளர் தெரிவை மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் நடாத்த முடியும்.

3. தவிசாளர் தெரிவு வாக்கெடுப்பு முறையில் நடத்தப்படுவதுடன் அது திறந்த வாக்கெடுப்பா அல்லது இரகசிய வாக்கெடுப்பா என்பதைக் கூட்டத்துக்குச் சமூகமளித்துள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மை உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

4. திறந்த வாக்கெடுப்பில் ஒவ்வொரு உறுப்பினரின் பெயரும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் வாசிக்கப்பட்டு அவரின் வாக்கு எந்த வேட்பாளருக்கு என்பதனைதைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

5. இரகசிய வாக்கெடுப்பாயின் வாக்களிப்புக்கு வாக்குச் சீட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.

ஒருவர் மாத்திரம் தவிசாளர் பதவிக்கு பிரேரிக்கப்பட்டால், ஒருவர் மாத்திரம் தவிசாளர் பதவிக்கு பிரேரிக்கப்பட்டால் வாக்கெடுப்பு இடம்பெறாமல் பிரேரிக்கப்பட்டவர் தவிசாளராக அறிவிக்கப்படுவார். சிலசமயம் இருவர் தவிசாளர் பதவிக்கு பிரேரிக்கப்பட்டால் இரண்டு உறுப்பினர்கள் தவிசாளர் தெரிவுக்குப் போட்டியிடுவார்களாயின் அவர்களின் பெரும்பான்மை வாக்குகளை பெற்றவர் தவிசாளராக அறிவிக்கப்படுவார்.

இரண்டுக்கு மேற்பட்டவர்கள் தவிசாளர் தெரிவிற்கு பிரேரிக்கப்பட்டால்,

1. இரண்டுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தவிசாளர் தெரிவுக்குப் போட்டியிடுவார்களாயின் முதலாமவர் பெற்ற வாக்குகள் மற்றைய அனைவரும் பெற்ற வாக்குகளின் கூட்டுத் தொகையினை விட கூடுதலாக இருப்பின் முதலாமவர் தவிசாளராக அறிவிக்கப்படுவார்.

2. இரண்டுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிடுகின்ற சந்தர்ப்பத்தில் முதலாமவர் பெற்றுக் கொண்ட வாக்குகள் மற்றைய அனைவரும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் கூட்டுத் தொகையை விட குறைவாக இருப்பின் ஆகக் குறைந்த வாக்குகளை பெற்றவரை போட்டியிலிருந்து நீக்கி விட்டு மற்றைய வேட்பாளர்களுக்கிடையில் போட்டி நடத்தப்படும்.

3. இவ்வாறு இரண்டுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிடும் சந்தர்ப்பத்தில் முதலாமவர் பெற்றுக் கொண்ட வாக்குகள் மற்றைய அனைவரும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் கூட்டுத் தொகையை விடக் குறைவாக அமைகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆகக் குறைந்த வாக்குகளை பெற்றவர் நீக்கப்பட்டு கடைசி இரண்டு வேட்பாளர்கள் போட்டிக்கு வரும் வரையில் வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும்.

4. இறுதியாகப் போட்டிக்கு வரும் அந்த இரண்டு வேட்பாளர்களில் பெரும்பான்மை வாக்குகளை பெற்றவர் தவிசாளராக அறிவிக்கப்படுவார்.

இரண்டுவேட்பாளர்களும் சமனான வாக்குகளைப் பெறும்போது,

தவிசாளர் தெரிவின் போது இரண்டு வேட்பாளர்களுக்கு இடையில் போட்டி நிலவி இருவரும் சமனான வாக்குகளை பெற்றால் தவிசாளரை தெரிவு செய்வதற்கான மேலதிக வாக்கு ஒனறைப் பாவிப்பதற்கான சந்தர்ப்பம் மொத்த உறுப்பினர்களில் ஒரு உறுப்பினருக்கு மாத்திரம் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் வங்கப்படும்.

ஆனால், அந்த மேலதிக வாக்கைப் பயன்படுத்தும் உறுப்பினர் யார் என்பதை மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்வார்.

சில வேளை இந்த தவிசாளர் தெரிவில் அதிஷ்டமும் செல்வாக்கு செலுத்தலாம்.

எனவே உள்ளூராட்சி தேர்தல் நிறைவடைந்த பின்னர் தான் தவிசாளர் தெரிவு அதன் பின்னர் உப தவிசாளர் அதன் பின்னர் வருடாந்த வரவு செலவு திட்டம் நிறைவேற்றம் என்பன சவாலாக இருக்கும்.

மொத்தத்தில் இந்தத் தேர்தல் முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பது பலரது எதிர்பார்ப்பாகும்.

**வி.ரி.சகாதேவராஜா,**
**காரைதீவு நிருபர்.**



# திருக்கேதீச்சர நாதர் ஆலய பரிவார வைரவரின் ஸ்தாபன கும்பாபிஷேகம்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பாடல் தலமான திருகேதீச்சரம் அருள்மிகு கௌரி உடனமர் திருக்கேதீச்சர நாதர் திருக்கோயில் பரிவார வைரவரின் உற்சவ மூர்த்தி ஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் (30) புதன் கிழமை காலை 06-53 மணிமுதல் 07-24 மணிவரையுள்ள இடப்பலக்கின சுப மூகூர்த்தத்தில் புதிதாக தாபிக்கப்பட்ட உற்சவமூர்த்தி வைரவப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட இருக்கின்றது.

நாளை மறுதினம் (28) திங்கட் கிழமை அதிகாலை 05.30 மணிமுதல் விநாயகர் வழிபாடு ஜலாதிவாசம், தான்யாதிவாசம், நயலோன்மீலனம், சயநாரோகணம் முதலிய கிரியை வழிபாடுகள் நடைபெறும்.

29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணி முதல் பகல் 12 மணிவரை பக்த பெருமக்கள் 'பால்காப்பு' சாற்றுதலும் இடம்பெறும் என்று மன்னார் திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை தெரிவித்துள்ளது.










# கதிரேசன் மண்டபத்தில் பரதநாட்டிய அரங்கேற்றம்

தியாகராஜர் கலைக் கோவில் இயக்குநர் நாட்டிய கலைமணி பவானி குகப்பிரியாவின் மாணவியரும் திரு. திருமதி சிவகுமார் தம்பதியினரின் புதல்விகளும்,திரு. திருமதி சுந்தரலிங்கம் தெய்வமமாலினி மற்றும் காலம்சென்ற பென்னையா கனகம்மாவின் பேத்திகளுமான செல்வி சஷ்மிகா, செல்வி ருக்ஷிகா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை, மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆசிய சர்வதேச பாடசாலை அதிபர் ஹர்ஷன டி. பெரெரா பிரதம அதிதியாகவும், கொழும்பு-12, ஹமீட் அல் குசைனியா கல்லூரி அதிபர் எம். ஆர். எம். ரிக் ஷ சிறப்பு அதிதியாகவும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பாலேந்திரன் சசி மகேந்திரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

அணிசேர் கலைஞர்களாக நட்டுவாங்கம் – பவானி குகப்பிரியா, வாய்ப்பாட்டு – தாரணி ராஜ்குமார், மிருதங்கம் – சண்முகலிங்கம் நாகராஜன், வயலின் – ஈ. நிரோஜன், புல்லாங்குழல் – சிவஞானசுந்தரம் யூட், தாள தரங்கம் – ரட்ணம் ரட்ணதுரை ஆகியோர் பங்கேற்பர்.






# திருகோணமலை மாவட்ட ஊடகப் பயிற்சி மே மாதம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

இலங்கை பத்திரிகை பேரவையால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் பிராந்திய ஊடகப் பட்டறைத் தொடரின் ஒரு பகுதியாக, திருகோணமலை மாவட்டப் பயிற்சி செயலமர்வு எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.ஹேமாந்த குமார தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை பத்திரிகை பேரவையின் சார்பில் உதவி பத்திரிகை ஆணையாளர் சுரோச்சன இரங்க, அரசாங்க தகவல் திணைக்களத்தின் மாவட்ட ஊடகப்பிரிவு அதிகாரி சித்தாரா தில்ஹானி, மாவட்ட ஊடகவியலாளர்களின் சார்பில் திருகோணமலை கங்கத்தலாவ ஐக்கிய ஊடக மன்றத்தின் தலைவர் மற்றும் பொருளாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஊடகத்துறை அமைச்சின் வழி காட்டலின் கீழ், திருகோணமலை மாவட்ட அரச அதிபர் அலுவலகம், அரச தகவல் திணைக்களம் மற்றும் இலங்கை பத்திரிகை பேரவை இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்தச் செயலமர்வில் மாவட்டத்தை சேரந்த அனைத்து அச்சு, இலத்திரனியல் ஊடகங்களின் செய்தியாளர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவுள்ளனர்.

கொவிட் பெருந்தொற்று காலப் பகுதிக்கு முந்திய ஆண்டுவரை நாடெங்கும் மாவட்ட வாரியாக நடத் தப்பட்டு வந்த இந்தச் செயலமர்வு பின்னர் தடைபட்டு இருந்தமை குறிப் பிடத்தக்கது.



## பஹல்காம் தாக்குதல் எதிரொலி:

# 12 லட்சம் முன்பதிவுகளை ரத்து செய்த சுற்றுலா பயணிகள்

காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதல் காரணமாக, அம்மாநிலத்துக்கு செல்ல முன்பதிவு செய்திருந்த 12 லட்சத்திற்கும் அதிகமானோர் தங்கள் முன்பதிவுகளை ரத்து செய்துள்ளனர்.

இந்தியாவின் சொர்கபூமியாகக் கருதப்படுவது காஷ்மீர். இதன் ஒரு பகுதியாக அனந்தநாக் மாவட்டத்தில் பஹல்காம் உள்ளது. பஹல்காம் குன்றில் மொத்தம் நான்கு சுற்றுலாத் தலங்கள் அமைந்துள்ளன.

இயற்கை எழில் கொஞ்சும் இந்த பஹல்காம், இந்தியாவின் 'மினி சுவிட்சர்லாந்து' என்றழைக்கப்படுகிறது. கடந்த ஏப்ரல் 22 இல் இங்கு திடீர் என 3 பயங்கரவாதிகள் நுழைந்தனர். அப்போது, அங்கிருந்த சுமார் ஆயிரம் சுற்றுலா பயணிகளை வளைத்து துப்பாக்கி சூடு நடத்தினர். இதில், 2 வெளிநாட்டவர் உட்பட 26 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

இந்த தாக்குதல் காஷ்மீருக்கு வரும் சுற்றுலா பயணிகளிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இதன் காரணமாக, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து காஷ்மீருக்கு சுற்றுலா வர திட்டமிட்டிருந்த சுற்றுலா பயணிகள் தங்கள் பயணத்தை ரத்து செய்துள்ளனர்.



இவர்கள் முன்கூட்டியே செய்திருந்த 12 லட்சத்துக்கும் அதிகமான தங்கும் விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் பதிவுகளை ரத்து செய்துள்ளனர்.

# பஹல்காம் பகுதியில் பாதுகாப்பு இல்லாதது ஏன்? எதிர்க்கட்சிகள் கேள்விக்கு மத்திய அரசு விளக்கம்

காஷ்மீரின் பஹல்காமில் பாதுகாப்புப் படை வீரர்கள் பணியமர்த்தப்படாதமை ஏன் என்ற எதிர்க்கட்சிகளின் கேள்விக்கு மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இதுதொடர்பாக டில்லியில் நேற்று முன்தினம் அனைத்து கட்சிகள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பின.



குறிப்பாக, சுற்றுலா தலமான பஹல்காமில் பாதுகாப்புப் படை வீரர்கள் பணியமர்த்தப்படாதமை ஏன் என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின. இதற்கு மத்திய உள்துறை மற்றும் உளவுத் துறை அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் ஜூலை 3 ஆம் திகதி புனித அமர்நாத் யாத்திரை தொடங்கப்பட உள்ளது. அப்போது பஹல்காம் முழுவதும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும்.

பஹல்காமில் இருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் பைசரன் பள்ளத்தாக்கு பகுதிக்கு செல்ல பாதுகாப்புப் படை தரப்பில் அனுமதி வழங்கப்படவில்லை. உள்ளூர் நிர்வாகம் தன்னிச்சையாக பைசரன் பகுதிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதி வழங்கி உள்ளது.

பாதுகாப்புப் படைகளிடம் முன்கூட்டியே தகவல் தெரிவித்திருந்தால் அந்த பகுதியில் வீரர்களை பணியில் அமர்த்தி இருப்போம். தீவிரவாதிகள் தாக்குதல் குறித்து தகவல் அறிந்த 20 நிமிடங்களுக்குள் அங்கு பாதுகாப்புப் படை வீரர்கள் விரைந்து சென்றனர். எனினும் சில பாதுகாப்பு குறைபாடுகள் இருந்ததை ஒப்புக்கொள்கிறோம்.

காஷ்மீரில் பாதுகாப்புப் படை வீரர்கள், அரசு ஊழியர்கள், வெளி மாநில தொழிலாளர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படுவது வழக்கம். முதல்முறையாக சுற்றுலா பயணிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதை எதிர்பார்க்கவில்லை." மத்திய உள்துறை மற்றும் உளவுத் துறை அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

காஷ்மீர் பகுதி இராணுவ வட்டாரங்கள் கூறிப்பிடுகையில்,

"காஷ்மீரின் ஹாஜி பூர் கணவாய் பகுதி பூகோளரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது. இது காஷ்மீர் பள்ளத்தாக்கையும் ஜம்மு பள்ளத்தாக்கையும் இணைக்கும் பகுதி ஆகும். தற்போது ஹாஜி பூர் கணவாய் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ளது. இந்த கணவாய் பகுதி வழியாகவே ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்து காஷ்மீருக்குள் தீவிரவாதிகள் நுழைகின்றனர்.

கடந்த 1965 ஆம் ஆண்டில் இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் நடை பெற்றது. அப்போது ஹாஜி பூர் கணவாய் பகுதியை இந்திய இராணுவம் கைப்பற்றியது. அதன் பிறகு தாஷ்கண்டில் இந்தியா, பாகிஸ்தான் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்காரணமாக ஹாஜி பூர் கணவாய் பாகிஸ்தானிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த 1971 ஆம் ஆண்டு வங்கதேச போர், 1999 ஆம் ஆண்டு கார்கில் போரின்போது இந்திய இராணுவத்தின் கை ஓங்கி இருந்தது. அந்த போர்களின்போது ஹாஜி பூர் கணவாயை கைப்பற்றும் வாய்ப்பு இருந்தது. ஆனால் அந்த பகுதியை கைப்பற்றாததால் எல்லை தாண்டிய தீவிரவாதம் தற்போதுவரை தீராத பிரச்சினையாக நீடித்து கொண்டிருக்கிறது.

கடந்த 2014 ஆம் ஆண்டில் உக்ரைனின் கிரிமியா பகுதியை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது. இதேபோல ஹாஜி பூர் கணவாய் பகுதியை இந்தியாவுடன் இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் எழுந்திருக்கிறது." என்று தெரிவித்துள் என.





# மூடி முத்திரையிடப்பட்டது போப் பிரான்சிஸின் உடல்

போப் பிரான்சிஸின் நல்லுடல் பேழை மூடி முத்திரையிடப்பட்டுள்ளது.

போப் பிரான்சிஸின் இறுதிச்சடங்கு இன்று நடைபெறும் நிலையில், ரோமிலும் வத்திகனிலும் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

இறுதி நல்லடக்க ஆராதனையில் 200,000 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. ஏற்கனவே 128,000 இற்கும் அதிக மானோர் புனித பேதுரு பேராலய சதுக்கத்திற்குள் பிரவேசித் துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸின் மறைவையொட்டி நேற்று முதல் வத்திக்கானில் 9 நாள்கள் துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

# ரஷ்ய ஜனாதிபதி - அமெரிக்க தூதுவர் இடையில் 3 மணிநேர கலந்துரையாடல்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும் அமெரிக்கத் தூதுவர் ஸ்டீவ் விட்கா.ஃப்புக்கும் இடையே சுமார் 3 மணிநேரம் ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மொஸ்கோவில் நேற்று இந்த சந்திப்பு இடம்பெற்றதாக க்ரெம்ளின் அறிவித்துள்ளது.

போரை நிறுத்துவதற்காக ரஷ்யாவும் உக்ரைனும் நேரடி பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான சாத்தியக்கூறு தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த சந்திப்பில் விவாதிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் அமெரிக்கா கருத்து ரைக்கவில்லை.

எனினும் இரு தரப்புக்கும் இடையே ஒரு சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான பணிகள் 'சுமுகமாக' இடம்பெற்று வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.







# தாய்லாந்தில் விமான விபத்து!



## ஆறு பேர் பலி

தாய்லாந்தில் பயிற்சி விமானம் ஒன்று கடலில் வீழ்ந்து விபத்துக் குள்ளானதில் ஆறு பேர் உயிரிழந் துள்ளனர்.

உயிரிழந்த ஆறுபேரும் அந்நாட்டு பொலிஸ் அதிகாரிகள் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெங்கொக்கிலிருந்து தென்மேற்கே 130 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கடலில் பராசூட் பயிற்சிக்காகச் சோதனை ஓட்டம் மேற்கொண்ட போதே இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடா முரசு
சனிக்கிழமை 26/04/2025

## கால்கரி நகரில் மனித எச்சங்கள்

கனடாவின் கல்கரியின் தென் மேற்குப் பகுதியில் உள்ள ஸ்ப்ரூஸ் ட்ரைவ் Spruce Drive S.W. எனும் பகுதியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

02




# கனடா பொதுத்தேர்தலின் முக்கிய வேட்பாளர்கள்

**எதிர்வரும் திங்கள்கிழமை கன டாவில் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், தேர்தலில் போட்டி யிடும் வேட்பாளர்களின் விவரங்கள் வருமாறு, கனடாவைப் பொருத்தவரை, மக்கள் பிரதமரை நேரடியாகத் தேர்ந் தெடுப்பதில்லை. தேர்தலில் எந்தக் கட்சி அதிக இருக்கைகளைக் கைப்பற்றுகிறதோ, அந்தக் கட்சியின் தலைவர் நாட்டின் பிரதமராவார்.**

**லிபரல் கட்சி:**

தேர்தலில் போட்டியிடுபவர்களில் லிபரல் கட்சியின் தலைவரும், தற்போதைய கனேடிய பிரதமருமான மார்க் கார்னி (வயது 60) ஒருவர்.

Fort Smith இல் பிறந்த கார்னி, கனடா வங்கி மற்றும் இங்கிலாந்து வங்கியின் தலைவராக இருந்ததால், அவர் கனடா மக்களுக்கு மட்டுமின்றி பிரித்தானிய மக்களுக்கும் நன்கு பரிச்சயமானவர் ஆவார்.

**கன்சர்வேட்டிவ் கட்சி:**

கனடாவில் திங்கள் கிழமை நடக்கும் தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகள் இரண்டு. ஒன்று மார்க் கார்னி சார்ந்த லிபரல் கட்சி. மற்றொன்று கன்சர்வேட்டிவ் கட்சி.

கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில், அக்கட்சியின் தலைவரான Pierre Poilievre (வயது 45) என்பவர் தேர்தலில் போட்டியிடுகிறார்.

Pierre, கால்கரியைச் சேர்ந்தவர் ஆவார். தனது 25ஆவது வயதில் நாடாளுமன்ற உறுப்பினரான Pierre, 20 ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டுவருகிறார்.

**Bloc Québécois கட்சி:**

Bloc Québécois கட்சியின் தலைவர் Yves-François Blanchet.

இக்கட்சி, கனடாவில் பிரெஞ்சு மொழி பேசும் பகுதிகளில் மட்டுமே வேட்பாளர்களைக் கொண்டுள்ளது.

ஆகவே, Blanchet கனடா பிரதமராக வாய்ப்பே இல்லை என்றே கனேடிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

**நியூ டெமாக்ரட்டிக் கட்சி:**

நியூ டெமாக்ரட்டிக் கட்சியின் தலைவர், ஜக்மீத் சிங் (வயது 46). ஏப்ரல் மாதத்தில் மத்தியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகள், கனேடிய மக்களில் 8.5 சதவிகிதத்தினர் மட்டுமே நியூ டெமாக்ரட்டிக் கட்சிக்கு வாக்களிக்க இருக்கின்றனர் என தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஒன்றாரியோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலி

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் மிடில்செக்ஸ் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எகரிமொன்ட் ட்ரைவ் Egremont Drive சாலையில் ஒரு பஸ் மற்றும் எஸ்.யூ.வீ வாகனம் என்பன மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக ஒன்ராறியோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து இடம்பெற்றதால் அந்த வீதி மூடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்களை எதிர்திசைகளில் செலுத்தியபோது மோதல் நிகழ்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எஸ்.யூ.வீ வாகன சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



பஸ் சாரதி கடுமையான காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# வெளிநாட்டு மாணவர்களுக்கான கட்டண அதிகரிப்பிற்கு நீதிமன்றம் தடை

கியூபெக் மாகாணத்தில் பல் கலைக்கழக மாணவர்களுக்கு விதிக் கப்பட்ட கட்டண அதிகரிப்பு தீர்மா னத்திற்கு நீதிமன்றம் தடை விதித் துள்ளது.

கியூபெக் மாகாணத்திற்கு வெளி யேயுள்ள மாணவர்களுக்கு விதிக் கப்பட்ட 3,000 டொலர் கட்டண உயர்வு அரசின் தரவுகளுக்கு ஆதாரம் இல் லாமல் எடுத்த முடிவாகும் என்று கியூபெக் மேல் நீதிமன்றம் தீர்மானித் துள்ளது.

இதன் மூலம் மொன்ட்ரியாலில் உள்ள ஆங்கிலக் கல்வி நிறுவனங்கள் McGill மற்றும் Concordia பல்கலைக் கழகங்களுக்கு ஒரு பகுதிநிலை வெற்றியாக அமைந்துள்ளது.

2023 ஆம் ஆண்டு, மாகாணத்திற்கு வெளியிருந்து வருகின்ற மாண வர்களுக்கு இவ்வாறு கட்டண அதிகரிப்பு அறிவிக்கப்பட்டது.

பிரெஞ்சு மொழியை பாதுகாப்ப தற்காக கட்டணத்தை 33 வீதமாக உயர்த்த வேண்டும் என்பதையும் மாநில உயர் கல்வி அமைச்சர் பாஸ்கல் டெரி தெரிவித்திருந்தார்.

அரசின் முடிவுகள் நியாயமான தரவுகளால் ஆதரிக்கப்படவில்லை என்றும், பிரெஞ்சு மொழிக்கு பாது காப்பு தேவை என்பது உண்மை என்றாலும், தவறான அல்லது இல் லாத தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முடிவுகள் எடுக்க முடியாது" என நீதிபதி எரிக் டூ்பூர் தெரிவித் துள்ளார்.

அரசின் கட்டண உயர்வை நீதிபதி தற்போது இரத்து செய்தாலும், அது இன்னும் 9 மாதங்கள் வரை அமலி லிருக்கும் வகையில் இடைக்கால அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்குள் அரசு புதிய கட்டணத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆங்கிலக் கல்வி நிறு வனங்களில் படிக்கும் மாநிலத்திற்கு வெளியேயுள்ள பட்டப்படிப்பு மாண வர்கள் பட்டம் பெறும் போது, பிரெஞ்சு மொழியில் குறைந்தது நடுத்தரத் திறனடைய வேண்டும் என்ற புதிய விதியும் இந்த தீர்ப்பின் மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது.




## கால்கரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் இந்த எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸார் தற்போது அந்தப் பகுதியில் விரிவான தேடுதல்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என தெரிவிக் கப்படுகின்றது.

ட்ரோன் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் கொண்டு சுற்றியுள்ள பகுதி கள் ஆய்வு செய்யப்படுவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

எச்சங்கள் மனித உடலானவைதான் என்பதையும், இறப்பு சந்தேகத்திற்கிடமா னதா என்பதையும் உறுதி செய்யும் வரை, அதிகாரப்பூர்வமாக எந்தவொரு தகவலும் வெளியிடப்படவில்லை.

பொதுமக்கள் அந்தப் பகுதிக்கு செல்வதனை தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.



# வேலை வாய்ப்பு மோசடி குறித்து கனடாவில் அவசர எச்சரிக்கை

கனடாவில் வேலைவாய்ப்புகளை வழங்குவதாக சமூக ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் மோசடி தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோவை சேர்ந்த இருவர் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் மின்னஞ்சல் வாயிலாகவும் கிடைத்த போலி வேலைவாய்ப்பு மோசடிகளில் சிக்கி மொத்தம் 80000 டொலர்களுக்கும் மேற்பட்ட பணத்தை இழந்துள்ள சம்பவங்கள் வெளியாகி உள்ளன.

டொரோன்டோவைச் சேர்ந்த கிரேக் பெர்கோஸ், அண்மையில் 11,000 டொலர் இழந்துள்ளார்.

பணியை இழந்த பின் மருத்துவ செலவுகளால் பாதிக்கப்பட்ட பெர்கோஸ், ஒரு சமூக ஊடக விளம்பரத்தில் பகுதி நேர வேலைக்கு பணம் தருகிறோம் என்ற விளம்பரத்தைக் கண்டு தொடர்பு கொண்டார்.

அதன்படி அவர் ஒரு TikTok Shop கணக்கை தொடக்குமாறு கூறப்பட்டு, முதலீட்டு பொருள்களை முன்கூட்டியே கொள்வனவு செய்ய பணம் செலுத்த வேண்டும் என்றும் பின்னர் தரகு கிடைக்கும் என்றும் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் பின்னர் அது முழு மோசடி என்பது தெரியவந்துள்ளதாகத் பெர்கோஸ் தெரிவிக்கின்றார்.

ஒஷாவாவைச் சேர்ந்த மரியா என்ற மற்றொரு பெண்ணும் 70,000 டொலர் பணத்தை இழந்துள்ளார்.

இந்நிலையில், சமூக ஊடகங்களில் இருந்து வரும் சந்தேகத்திற்குரிய வேலை வாய்ப்புகளை ஏற்க வேண்டாம்என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேரடி நேர்காணல் இல்லாத வேலைவாய்ப்புகள் மற்றும் எளிய பணிக்கே அதிக ஊதியம் அளிக்கப்படும் எனும் வாக்குறுதிகளை நம்ப வேண்டாம் எனவும் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பணம் அனுப்பும் போது கவனமாக இருக்கவும் பணம் சம்பாதிக்கவே பணம் செலுத்துமாறு கூறினால் அது மோசடியாக இருக்கலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# மிசிசாகாவில் தொழிற்சாலை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் மிசிசாகாவில் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற தொழிற்சாலை விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கிம்பெல் தெருவும், ட்ரூ சாலையும் சந்திக்கும் பகுதியில், டெர்ரி மற்றும் பிரமலியா சாலைகளுக்கு அருகே உள்ள தொழிற்சாலையொன்றில் இடம் பெற்றுள்ளது.

வேலைசெய்து கொண்டிருந்தபொது ஏற்பட்ட வெடி விபத்தில், ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என மருத்துவப் பராமரிப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆணென்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனடாவின் தொழிலாளர் அமைச்சும் தீயணைப்பு மேற்பார்வை அலுவலகமும் இந்த விபத்து தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றன.